
# நோயாளிக்குத தகவல்

# சிகிச்சை மருந்து: இருதய நோய்கள்

*ஆன்ட்டிஅரித்மிக் ஏஜண்ட்ஸ்*

- ☐ சோட்டாலோல்
- ☐ ஃபிளக்கய்னைட்
- ☐ புரோப்பா ஃபெனோன்
- ☐ அமியோடரோன்



Medicine To Treat: **Cardiac Diseases**
**Antiarrhythmic Agents**

## உங்கள் மருந்தைப் பற்றி

உங்கள் மருத்துவர் சோட்டாலோல், ஃபிளக்கய்னைட் அசிட்டேட், புரோப்பாஃபெனோன், அமியோடரோன் போன்ற ஆன்ட்ரிஅரித்மிக் மருந்துகளில் ஒன்றை உங்களுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

## இந்த மருந்துகள் எதற்குப் பயன்படுத்தப்படுகின்றன?

இவை ஆன்ட்டிஅரித்மிக் வகை மருந்துகள், வழக்கத்திற்கு மாறான இதயத் துடிப்பு நிகழ்வதைத் தணிக்கவும் தடுக்கவும் முக்கியமாக இவை பயன்படுத்தப்படுகின்றன.

## இந்த மருந்தை நான் எப்படி உட்கொள்வது?

தண்ணீருடன் வாழ்வழியாக உங்கள் மருந்தை உட்கொள்ளுங்கள். மருந்தின் ஒட்டுவில்லையில் அறிவுறுத்தப்பட்டுள்ள வழிமுறைகளைகளைப் பின்பற்றுங்கள். வழக்கமான நேரத்தில் வேளை தவறாமல் உட்கொள்ளுங்கள். எப்பொழுதும் உணவுக்கு முன் அல்லது பின்னர் மருந்தை உட்கொள்ளுங்கள்.

## ஒருவேளை மருந்தை நான் உட்கொள்ள மறந்துவிட்டால் என்ன செய்யவேண்டும்?

கூடியவரை தவறவிடாதீர்கள். ஒருவேளை மருந்தை மறந்தால், தினமும் மூன்று வேளை, இரண்டு வேளை ஒரு வேளை என உட்கொள்ளக்கூடிய ஏற்பாட்டைப் பொறுத்து உங்களால் இயன்ற விரைவில், முறையே 4 மணி, 6 மணி, மற்றும் 12 மணி நேர இடைவெளிக்குள் உட்கொண்டுவிடுங்கள். அந்த இடைவெளி முறையே 4 மணி, 8 மணி மற்றும் 12 மணி நேரத்தைக் கடந்துவிட்டால் மருந்தை உட்கொள்ளாதீர்கள். அடுத்த வேளையிலிருந்து முறையான நேரத்தில் வழக்கமான இடைவெளியில் மருந்தைத் தொடருங்கள். மருத்துவர் கூறினால் மட்டுமே இரு மடங்கு மருந்தை உட்கொள்ளலாம்.

## இந்த மருந்து ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான பக்கவிளைவுகள் யாவை?

இந்த மருந்து வகைகள் வழக்கத்திற்கு மாறான தற்போதைய இதயத் துடிப்பு வேகத்தை மோசமாக்கலாம் அல்லது உயிரைப் பறிக்கும் அளவுக்கு வழக்கத்திற்கு மாறான இதயத் துடிப்பு நிலையை புதிதாக ஏற்படுத்தலாம். இதயத் துடிப்பு கடுமையாகக் குறைதல், கடுமையான தலைசுற்றல் அல்லது மயக்கநிலை உங்களுக்கு ஏற்படலாம்.

| மருந்து | சாத்தியமான மற்ற பக்கவிளைவுகள் |
|---|---|
| சோட்டாலோல் | • களைப்பு, தலைசுற்றல், குமட்டல், வாந்தி மற்றும் மூச்சுத்திணறல்<br>• சிறுநீர்த் தொந்தரவுகள்<br>• உடலுறவு பாதிப்புகள்<br>• முதுகுவலி, சொறி, இரத்தக்கசிவு மற்றும் பார்வைக் கோளாறு |
| ஃபிளக்கய்னைட் அசிட்டேட் | • தலைசுற்றல், தலைவலி, களைப்பு<br>• பார்வைத் தொந்தரவுகள்<br>• குமட்டல்<br>• சொறிகள்<br>• மூச்சுத்திணறல் |
| புரோப்பாஃபெனோன் | • மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, குமட்டல் மற்றும் வாந்தி<br>• சுவை மாற்றங்கள்<br>• தலைவலி, தலைசுற்றல், களைப்பு, மயக்கநிலை<br>• வாய் வறட்சி<br>• பார்வை மங்கல்<br>• மார்பு வலி, மூச்சுத் திணறல் |
| அமியோடரோன் | அமியோடரோனின் பக்கவிளைவுகள் உடலில் உள்ள ஒரு சில உறுப்புகளை பாதிக்கும். அதனால் அவற்றை முறையாகக் கண்காணித்து உங்கள் மருத்துவரிடம் தெரிவிப்பது அவசியம்.<br><br>அமியோடரோன் நுரையீரல் இயக்கத்தை பாதிக்கும். உடல் உழைப்பின்போது மூச்சுத் திணறல், வறண்ட இருமல், காய்ச்சல், மார்பு வலி, மந்தம், சோர்வு முதலானவை ஆரம்ப அறிகுறிகள்,<br><br>அமியோடரோன் கல்லீரல் இயக்கத்தை பாதிக்கும். குமட்டல், வாந்தி, வயிற்றுவலி, எடை இழப்பு, மஞ்சள் காமாலை, வயிற்று வீக்கம் உள்ளிட்ட அறிகுறிகள் அதில் அடங்கும்.<br><br>அமியோடரோன் தைராய்டு சுரப்பி இயக்கத்தை பாதிக்கும். எடை இழப்பு, மனக் கவலை, நடுக்கம், மற்றும் தைராய்டு இயக்கம் அதிகம் உள்ளவர்களுக்கு வெப்பம் தாங்க முடியாத நிலை மற்றும் தைராய்டு இயக்கம் குறைவாக உள்ளவர்களுக்கு குளிர் தாங்க முடியாத நிலை, மந்தம், குறைவான இதயத் துடிப்பு ஆகியவை ஏற்படும். |

இந்த அறிகுறிகளில் எதுவும் ஏற்பட்டால் அன்புகூர்ந்து இயன்ற விரைவில் உங்கள் மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

*காலாவதியான அல்லது இனியும் தேவைப்படாத மருந்துகளை ஒதுக்கி விடுங்கள்*

## எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை நான் எடுக்க வேண்டும்?

இந்த வகை மருந்துகளுடன் சில மருந்துகள் சேரும்போது பாதிப்பு ஏற்படும். அதனால் பாரம்பரிய மருந்துகளை இவற்றுடன் சேர்த்து உட்கொள்ளக் கூடாது என ஆலோசனை கூறப்படுகிறது. மற்ற நோய்களுக்காக ஆலோசனை நாடும் போது இந்த மருந்துகளை உட்கொண்டு வருகிறீர்கள் என்பதை உங்கள் மருத்துவரிடம் நீங்கள் தெரிவிக்க வேண்டும்.

கருவுற்ற பெண்கள் இந்த மருந்துகளை உட்கொள்வது குறித்து தற்போதைக்கு போதிய ஆய்வுத் தகவல்கள் கிடைக்கவில்லை. அவர்களுக்கு அந்த மருந்துகள் தேவை என்று தெளிவாகத் தெரிந்தால் மட்டுமே கர்ப்ப காலத்தில் அவற்றை உட்கொள்ளலாம்.

இந்த மருந்து பாலுடன் சேரக்கூடியது. அதனால் பாலூட்டும் குழந்தைகளுக்கு கடுமையான பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் இந்த மருந்தை உட்கொள்ளும் காலத்தில் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்திவிட வேண்டும்.

## மருந்துகளை நான் சேமித்து வைப்பது எப்படி?

உங்கள் மருந்துகளை காற்று புகாத கலத்தில் இறுக மூடி, குளிர்ச்சியான உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள்.

SingHealth Ministry Of Health National Healthcare Group

Printed in 2002